1992 மார்ச் 25]

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவ்வாறு விரிவான விடை அளிக்க விரும்புகிற மாண்புமிகு அமைச்சர்கள் அதை அவையில் வைத்து விடுவது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சி தொகுதியிலே 55 சத வீதம் மக்கள் ஆதிதிராவிட மக்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய பட்டா விஷயத்தில் 17 பகுதிகளிலே ஆக்கிரமிப்புகள் நடந்து இருக்கின்றன. அரசினால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை மீண்டும் அதற்குரிய நிலச் சொந்தக்காரர்கள் தடை செய்வதற்காக உயர் நீதிமன்றத்திலே வழக்கு தொடரக்கூடிய ஒரு இழி நிலையை மாற்றுவதற்கு சட்ட திருத்தம் ஏதேனும் செய்யக்கூடிய ஆலோசனை அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் இது போன்ற ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அதையும் எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்கு சென்று அது தள்ளுபடி செய்யப்பட்டது. ஆகையினால் இது போன்ற கோரிக்கை சட்டத் துறை மூலம் ஆலோசிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 355, திரு. எஸ். டேனியல்ராஜ், மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

355—

மீனவர்களைத் தேட ஹெலிகாப்டர்,

*4364 திரு. எஸ். டேனியல் ராஜ் :

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலில் காணாமல் போன மீனவர்களை தேடுவதற்கு தூத்துக்குடியில் ஹெலிகாப்டர் நிறுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதற்கான கருத்துரு ஏதுமில்லை.

[1992 மார்ச் 25

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலிலே மீன் பிடிக்கச் செல்லுகிற மீனவர்கள் இயற்கை சீற்றத்தின் காரணமாகவோ திடீர் என்று படகுகள் பழுதடைந்து விடுவதன் காரணமாகவோ கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதைத் தவிர்க்கின்ற வகையிலே. காணாமல் போன மீனவர்களை தேடி கண்டு பிடிக்கின்ற வகையிலே தூத்துக்குடியிலே ஒரு ஹெலிகாப்டர் நிறுத்துவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மீனவர்கள் காணாமல் போன செய்தி கேட்டவுடன் உடனடியாக மீனவர்கள் குறித்த விவரங்களை கடல் ஓர பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், இந்திய கடற்படை அதிகாரிகள் மற்றும் எல்லாத் துறைமுக அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டு அவர்கள் மூலமாக கடலில் உள்ள எல்லா கப்பல்களுக்கும் தெரிவித்து மீனவர்களைக் கண்டு பிடிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹெலிகாப்டர்கள் நிறுத்த முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள். ஆகவே காணாமல் போன மீனவர்களை உடனடியாகத் தேடி கண்டு பிடிப்பதற்கு அதிவேகமாக செல்லக்கூடிய இயந்திரப் படகு ஒன்றை தூத்துக்குடியில் நிறுத்துவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற நிதி நெருக்கடியை கருத்தில் கொண்டு தூத்துக்குடியில் ஹெலிகாப்டர் நிறுத்துவதால் அரசுக்கு கூடுதல் செலவு ஆகும். எனவே காணாமல் போகும் மீனவர்களையும் படகுகளையும் தேடி மீட்க ராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் ரேடியோ தொலைபேசி அமைத்து அதாவது நோடல் பாயிண்ட்ஸ் அமைத்துத் தேடுவதற்கான தொடர்பு முனைகள் ஏற்படுத்தவும் புரட்சித் தலைவியின் அரசு ஆராய்ந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிவேக மோட்டார் படகைப் பற்றி கேட்டார்கள். அது பற்றியும் அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். கோடிமாரி.

1992 மார்ச் 25]

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காணாமல் போன மீனவர்களை உடனடியாக தேடுவதற்கு அரசு என்ன வழி முறைகளை கையாளுகின்றது, அதை நிரந்தரமாக ஆக்குவதற்கு அரசிடம் ஏதேனும் செயற் குறிப்பு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் இது பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அவசர காலங்களில் நமது அண்டை நாடுகளான இலங்கை, பங்களா தேஷ் முதலிய நாடுகளில் உள்ள இந்திய ஹைகமிஷனர் அவர்களையும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அந்நாட்டு அரசு உதவியுடன் காணாமல் போன மீனவர்களை கண்டு அறிந்து நம் நாட்டிற்கு திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மேலும் ஹெலிகாப்டர் மூலம் மீனவர்களை தேட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல உடனடியாக மீனவர்கள் காணாமல் போன செய்தி கேட்ட உடன் இந்திய கடற் படை அதிகாரிகளுக்கும் மற்றும் எல்லா துறைமுக அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் மூலமாக எல்லா கப்பல்களுக்கும் தெரிவித்து மீனவர்களைக் கண்டு பிடிக்க எல்லா விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமார தாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழகத்தின் கரையோரம் பல இலட்சம் மீனவர்களை உள்ளடக்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே அடிக்கடி மீனவர்களுக்கு விபத்துக்களும், மீனவர்கள் காணாமல் போகின்ற நிகழ்வுகளும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற காரணத்தினாலே மீனவர்களை பாதுகாப்பதற்காகவே ஒரு ஹெலிகாப்டர் வாங்கப்பட்டு அது பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உடனடி விமோசனம் கிடைக்கின்ற விதத்தில் அவர்களுக்கு பணி புரிய இந்த அரசு திட்டம் ஏதும் வைத்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் தற்போது இருக்கின்ற நிதிநிலை நெருக்கடியைக் கருத்தில் கொண்டு ஹெலிகாப்டர் வாங்குகின்ற உத்தேசம் இல்லை என்று கூறியிருக்கிறேன். மீனவர்களைத் தேடுவதற்காக இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் நோடல் பாயிண்ட்ஸ் அமைக்கப்பட்டு,

தேடுவதற்காக தொடர்பு முனைகள் ஏற்படுத்தவும் டாக்டர் புரட்சித் தலைவி அரசு ஆராய்ந்து வருகிறது என்பதை ஏற்கெனவே தெரிவித்துள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 356, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர்.

356—

திருப்பத்தூர் தொகுதியில் தொழிற்பேட்டை.

*5897 திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தமிழகத்தில் தொழில் துறையிலே பொற்காலத்தை படைக்க வேண்டும் என்று பல்வேறு சலுகைகளை அளித்துள்ள தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு குறைந்தபட்சம் 10 தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், சிட்கோ, திருப்பத்தூரில் தொழிற்பேட்டை அமைக்க வேலூர் மாவட்டத் தொழில் மையத்தின் உதவியுடன் முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளும்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே திருப்பத்தூர் தொகுதி 1977 முதல் 1989 பொதுத் தேர்தல் வரை தி.மு.க. கோட்டை என்று வர்ணிக்கப்பட்ட கோட்டையை, இந்தப் பொதுத் தேர்தலிலே உடைத்து நொறுக்கி எங்கள் காவல் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி கோட்டை என நிரூபித்துக் காட்டிய திருப்பத்தூர் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை திருப்பத்தூரில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டும் என்பதே. அரசு இதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தபட்சம் 10 தொழில் முனைவோர்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவ